RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 273 அக்டோபர் 6, 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# ஞானேஷ் குமாரை இடைநீக்கம் செய்ய உச்ச நீதிமன்றம் மறுப்பு: தேர்தல் ஆணையத்துக்கு நோட்டீஸ்

புது டெல்லி: அக்.6-

தலைமைத் தேர்தல் ஆணையத்தில் உள்ள மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் ஒப்புதல் அல்லது ஒருமித்த கருத்து இல்லாமல், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், அவரை இடைநீக்கம் செய்வதற்கான இடைக்கால உத்தரவை பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் ஒப்புதல் இன்றி பல வழிகாட்டுதல்களும், மென்பொருள் மாற்றங்களும் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டி, தலைமைத் தேர்தல் ஆணையரின் தலைமையிலான தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டை எதிர்த்துத் தொடரப்பட்ட பல மனுக்களை உச்ச நீதிமன்றம் விசாரித்து வருகிறது.

தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, மனுவில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு நோட்டீஸ் அனுப்பியது.



ஆணையத்தின் பதிலைப் பரிசீலித்த பிறகு, தேவையான ஒருமித்த கருத்து இல்லாமல் தலைமைத் தேர்தல் ஆணையர் எடுத்த முடிவுகளை மறுபரிசீலனை செய்யவோ அல்லது ரத்து செய்யவோ வாய்ப்புள்ளதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனது அதிகாரங்களைப் பயன்படுத்திய விதம் மற்றும் சர்ச்சைக்குரிய 'படிவம் 6' மாற்றம் உள்ளிட்டவை குறித்துத் தொடரப்பட்ட வழக்குகளில், சம்பந்தப்பட்ட முடிவுகள் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் திங்களன்று உத்தரவிட்டது.

"ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்போது, படிவம் 6-ஐ மாற்றியது யார் என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். ஒருமித்த கருத்து இல்லையெனில், முடிவு பெரும்பான்மை அடிப்படையில் இருக்க வேண்டும்; இல்லையெனில், அந்த முடிவு ரத்து செய்யப்படலாம். நீங்கள் உங்கள் வாதங்களை ஒரு செய்தித்தாள் அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே முன்வைக்கிறீர்கள்" என்று தலைமை நீதிபதி கூறினார்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான விகாஸ் சிங் இதற்குப் பதிலளிக்கையில், "தேர்தல் ஆணையத்திடமிருந்தே ஒரு பத்திரிகை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் இந்த அறிக்கையை மறுக்கவில்லை" என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த தலைமை நீதிபதி, "அந்த அறிக்கை துல்லியமானதாகவோ அல்லது தவறானதாகவோ இருக்கலாம். எனவே அதன் அடிப்படையில் நாங்கள் உத்தரவு பிறப்பிக்க முடியாது. தேர்தல் ஆணையத்தின் பதிலுக்காக நாங்கள் காத்திருக்க வேண்டும்," என்று கூறினார்.

# 'வெற்றி பயணம்' திட்டத்துக்கு தடை விதிக்க ஐகோர்ட் மறுப்பு: வழக்கு தள்ளுபடி

சென்னை: அக்.6-

தமிழகம் முழுவதும் அரசுப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் 'வெற்றி பயணம்' திட்டத்திற்கு தடை கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

அரசுப் பேருந்துகளில் தமிழகம் முழுவதும் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் 'வெற்றி பயணம்' திட்டத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் வேலைக்கு செல்லும் பெண்கள், கல்லூரி மாணவிகள், வயதானவர்கள் உள்ளிட்டோர் பயன் பெறும் வகையில் செயல்படுத்தி வந்த விடியல் பயண திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 'வெற்றி பயண திட்டம்' என்ற பெயரில் அக்டோபர் 2-ம் தேதி தமிழக முதல்வர் விஜய் துவக்கி வைத்தார்.

இந்நிலையில், தவெக தலைமையில் ஆட்சி அமைந்த பின், தமிழகம் முழுவதும் இயங்கும் 12 ஆயிரத்து 600-க்கும் மேற்பட்ட பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்ய வகை செய்யும், நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வெற்றி பயண திட்டத்தை எதிர்த்து ஈரோட்டைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர் கலாமணி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.



அதில், "வெற்றி பயண திட்டம் காரணமாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் வருவாய் இழப்பை சந்தித்து, தொழிலை கைவிட வேண்டிய சூழல் உருவாகும் எனவும், பெண் பயணிகளிடம் கட்டணம் வசூலிக்காமல் இருப்பது அரசியல் சட்டத்தின் சம உரிமையை மீறும் செயல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி பயண திட்ட பயனாளிகளுக்கான கட்டணமாக, ஆண்டுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாயை அரசே ஏற்றுக் கொண்ட நிலையில், இதேபோல இழப்பீடு வழங்கி, தனியார் பேருந்துகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற தனியார் பேருந்து உரிமையாளர்கள் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை அரசு ஏற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் முதல்வரின் அறிவிப்பு அடிப்படையில் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் தொடர்பாக எந்த அரசாணையும் பிறப்பிக்கப்படவில்லை என்பதால், இந்த திட்டத்தை அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என அறிவிக்க வேண்டும்" என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கு முடியும் வரை, வெற்றி பயண திட்டத்துக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்" எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பழனி, எந்த அரசாணையும் இல்லாமல் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதனால், அரசாணை இந்த வழக்கில் முக்கியம் இல்லை என்பதால், அதை எதிர்த்து வழக்கு தொடரவில்லை" என தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், "வெற்றி பயணத் திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த தடை விதிக்க முடியாது. ஒரு மாவட்டத்தில் செயல்படும் தனியார் போக்குவரத்து சங்கம் எந்த அடிப்படையில் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு தடை கோர முடியும்.

அக்.02-ம் தேதி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையை எதிர்த்து மனுதாரர் வழக்கு தொடரலாம். அதிலும், தங்களது மாவட்டத்திற்கு மட்டும் திட்டத்தை செயல்படுத்த தடை கோர மனுதாரருக்கு உரிமை உள்ளது" என நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, மனுவை திரும்பப் பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்ற நீதிபதிகள், மனுவை திரும்பப்பெற மனுதாரரை அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# "ஜிஎஸ்டி வருவாய் தொடர் வீழ்ச்சி; தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்" - நயினார் நாகேந்திரன்

சென்னை: அக்.6-

"தமிழக பொருளாதாரத்தைப் பாழ்படுத்திய தவெக அரசு, தொடர்ந்து 3 மாதங்களாக ஜிஎஸ்டி வருவாய் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களை உடனடியாக வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும்." என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "வெற்றுப் பேச்சுக்களாலும் சமூக வலைதளப் புகழ்ச்சிகளாலும் ஒரு மாநிலத்தின் ஆட்சியை நடத்திவிட முடியாது என்பதை மத்திய அரசின் அதிகாரப்பூர்வ ஜிஎஸ்டி வரி வசூல் புள்ளிவிவரங்கள் அப்பட்டமாக நிரூபித்துவிட்டன.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில், இந்த 2026-ஆம் ஆண்டின் கடந்த மூன்று மாதங்களாகவே (ஜூலை -1%, ஆகஸ்ட் -1%, செப்டம்பர் -5%) தமிழ்நாடு தொடர்ந்து வரி வருவாய் வீழ்ச்சியையே சந்தித்து வருகிறது. உத்தரப் பிரதேசம் (18%), குஜராத் (17%), கர்நாடகா (16%), மகாராஷ்டிரா (15%) எனப் பிற முக்கிய மாநிலங்கள் கடந்த ஆண்டை விட அபார வளர்ச்சி கண்டு வரும் நிலையில், தவெக ஆட்சியில் தமிழ்நாடு மட்டும் தொடர்ச்சியாக 3 மாதங்களாக வீழ்ச்சியை சந்தித்து அதலபாதாளத்திற்கு சரிந்திருப்பது பேரதிர்ச்சியளிக்கிறது.

தொழில்துறையையும் வர்த்தகத்தையும் வழிநடத்தத் தெரியாத முதல்வர் விஜய்யின் அனுபவமின்மையே இந்தத் தொடர் ஜி.எஸ்.டி வீழ்ச்சிக்கு நேரடிக் காரணம். அரசுக்கு வருமானத்தை ஈட்டவும், நிதி நிர்வாகத்தைச் சரியாகக் கையாளவும் திறனில்லை; மாறாக, கவர்ச்சி அறிவிப்புகளையும், சினிமாப் பாணி விளம்பரங்களையும் காட்டி மக்களை ஏமாற்றி வருகிறார் முதலமைச்சர் விஜய். தமிழ்நாட்டின் நிதி ஆதாரத்தையே முடக்கிப்போடும் இந்த மோசமான ஆட்சியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, மாநிலப் பொருளாதாரத்தைப் பாழ்படுத்திய தவெக அரசு, தொடர்ந்து 3 மாதங்களாக ஜி.எஸ்.டி வருவாய் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களை உடனடியாக வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும். வெற்று முழக்கங்களால் நிதி நெருக்கடியை இனியும் மறைக்க முடியாது; முதலமைச்சர் விஜய் உடனடியாக நிதி நிர்வாகத்தைச் சீரமைக்காவிட்டால், இந்தச் சீர்கேட்டிற்கு மக்கள் மன்றத்தில் தவெக அரசு கடுமையான பாடத்தைக் கற்க நேரிடும்' எனத் தெரிவித்துள்ளார்.

# பிரசவத்திற்குப் பின் பெண் உயிரிழப்பு: 2-வது நாளாக உறவினர்கள் போராட்டம்

## தவறான சிகிச்சையால் உயிரிழந்ததாக குற்றச்சாட்டு - அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்குப் பின் உடலைப் பெற சம்மதம்

சிவகங்கை, அக்-06

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட பெண் உயிரிழந்த சம்பவத்தில், தவறான சிகிச்சையே உயிரிழப்புக்கு காரணம் என குற்றம்சாட்டி உடலை வாங்க மறுத்த உறவினர்கள் இரண்டாவது நாளாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து உடலைப் பெற்றுக்கொள்ள உறவினர்கள் சம்மதித்ததால் போராட்டம் முடிவுக்கு வந்தது.

சிவகங்கையை அடுத்த கீழச்சாலூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கண்ணன் (30) என்பவரின் மனைவி வனிதா (27). இவர்களுக்கு ரித்திகா (5), ரிஷிகா (3) ஆகிய இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

மீண்டும் கர்ப்பமான வனிதா, பிரசவத்திற்காக கடந்த செப்டம்பர் 30-ம் தேதி சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அக்டோபர் 2-ம் தேதி அறுவை சிகிச்சை மூலம் அவருக்கு மூன்றாவதாக பெண் குழந்தை பிறந்தது.





இந்நிலையில் வனிதா உயிரிழந்தார். இதையடுத்து, மருத்துவர்கள் அளித்த தவறான சிகிச்சையே வனிதாவின் உயிரிழப்புக்கு காரணம் என அவரது உறவினர்கள் குற்றம்சாட்டி, உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டாவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்த நிலையில், சிவகங்கை அம்பேத்கர் சிலை அருகே பெண்கள் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். அதேநேரத்தில் ஆண்கள் மருத்துவமனை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சிவகங்கை தொகுதி எம்.எல்.ஏ. குழந்தை ராணி நாச்சியார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் சுகுமார், பிரான்சிஸ், துணைக் காவல் கண்காணிப்பாளர் அமல அட்வின், சிவகங்கை கோட்டாட்சியர் ஜெபி கிரேசி, வட்டாட்சியர் ராஜலட்சுமி



உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் வனிதாவின் உடலைப் பெற்றுக்கொள்ள உறவினர்கள் சம்மதம் தெரிவித்தனர். இதையடுத்து இரண்டு நாட்களாக நடைபெற்று வந்த போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.

# தாம்பரம் – கடற்கரை மின்சார ரயில் தடம் புரண்டு விபத்து: ரயில் சேவை பாதிப்பு

சென்னை, அக்.06-

தாம்பரத்தில் இருந்து சென்னை கடற்கரை ரயில் நிலையம் நோக்கி வந்துகொண்டிருந்த மின்சார ரயில், சென்னை கோட்டை ரயில் நிலையத்தில் தடம் புரண்டது.

தாம்பரத்தில் இருந்து கடற்கரை நோக்கி இயக்கப்பட்ட புறநகர் மின்சார ரயில், சென்னை கோட்டை ரயில் நிலையம் அருகே தடம் புரண்டது. ரயிலின் ஒரு பெட்டி மட்டும் தண்டவாளத்தைவிட்டு விலகி தடம் புரண்டது. இதனால், கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து தாம்பரம் நோக்கிச் செல்லும் ரயில்கள் ரத்து



செய்யப்பட்டுள்ளன.

விபத்து மீட்பு ரயிலை வரவழைத்து தடம்புரண்ட பெட்டியை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்தச் சூழலில், ரயிலின் பெட்டி தடம் புரண்டு முக்கிய வழித்தடத்தில் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டதால் பயணிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

ரயிலின் பெட்டியைத் தண்டவாளத்தில் நிறுத்தி சரி செய்யும் பணிகளில் தெற்கு ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். அதுவரை தாம்பரம், செங்கல்பட்டு செல்லும் அனைத்து ரயில்களும் பூங்கா ரயில் நிலையத்தில் இருந்து இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



# புள்ளிலையன் ஊராட்சி ரங்கா கூட்டுறவு நகர் / ரங்கா கார்டன் குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் அதிகாரிகளிடம் மனு வழங்கல்

மாதவரம், அக்.06-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சி மகளிர் குழு கட்டிடத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் பொன்னையன் தலைமையில் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் செந்தில்குமார், புழல் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன், பற்றாளர் சுலோக்சனா, கிராம நிர்வாக அலுவலர் லோகேஷ் ஆகியோரிடம் புள்ளி லையன் ஊராட்சிக்குட்பட்ட ரங்கா கூட்டுறவு நகர் மற்றும் ரங்கா கார்டன் குடியிருப்போர் நலச் சங்கக் குழு தலைவர் ஜி.காட்டுராஜ், செயலாளர் ரீமாபிந்து, துணைத்தலைவர் ரவி உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் கீழ்க்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினர். ரங்கா கார்டன் பகுதியில் சேதமடைந்துள்ள சாலைகள், குறுக்குச் சாலைகளை சீரமைக்க வேண்டுமென்றும், சிமெண்ட் / கான்கிரீட் சாலை வசதி இல்லாத பகுதிகளில் முறையான சிமெண்ட் / கான்கிரீட் சாலைகள் அமைத்து தர வேண்டுமென்றும், இந்தப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான, போதுமான பஞ்சாயத்து குடிநீர் விநியோகிக்க வேண்டுமென்றும், சேதமடைந்துள்ள அனைத்து தெரு விளக்குகளையும் உடனடியாக சீரமைத்து தரவும், வெளிச்சம் இல்லாத பகுதிகளில் புதிய மின்கம்பங்களை ஏற்படுத்துத் தரவும், தெரு பெயர் பலகைகள் இல்லாத அனைத்து இடங்களிலும் முறையான தெருப் பெயர் பலகைகளை அமைத்து தரவும், இப்பகுதியில் உள்ள இரண்டு பூங்காக்களையும் முறையாக புதுப்பித்து பராமரிக்கவும், உடைந்துள்ள அனைத்து உபகரணங்களையும் பழுது பார்க்கவோ அல்லது தேவையான இடங்களில் புதிய உபகரணங்களை அமைத்து தர வேண்டுமென்றும், மின்பெட்டிகள், மின்சார கேபிள்களை பாதுகாப்பான முறையில் சீரமைத்து மாற்றியமைக்க வேண்டுமென்றும், ரங்கா கார்டன் முழுவதும் மழைநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பை ஏற்படுத்தி, மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதை தடுக்க வேண்டுமென்றும், வளர்ந்துள்ள மரக்கிளைகளை அகற்றி, சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், அழகாகவும் பராமரிக்க வேண்டுமென்றும், தேவையற்ற குப்பைகளை 15 நாள்களுக்கு ஒருமுறை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மனு வழங்கினர். மனுவை பெற்றக் கொண்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறினர்.



# தேனி மாவட்ட கண்காணிப்பாளருக்கு பொதுமக்கள் சார்பாக வேண்டுகோள்?...

தேனி, அக். 06-

தேனி மாவட்டத்தில் சிறார்கள் வாகனம் ஓட்டுவதைத் தடுக்கவும் போக்குவரத்து விதிமீறல்களுடன் சட்டவிரோத நடவடிக்கைகளையும் கண்காணிக்கவும் கோரிக்கை தீவிர படுத்ததேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சிறார்கள் உரிய ஓட்டுநர் உரிமம் இன்றி, ஒரே வாகனத்தில் மூன்று அல்லது நான்கு பேர் பயணித்து, பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் வாகனம் ஓட்டுவதாக பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மேலும், போதைப்பொருள் அல்லது போதை தரும் பொருட்களை பயன்படுத்திய நிலையில் சிலர் வாகனம் ஓட்டுவதாக கூறப்படும் புகார்கள் குறித்தும் காவல்துறை உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போக்குவரத்துகாவல்துறையினர் ஹெல்மெட் மற்றும் போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளுடன் மட்டும் நின்றுவிடாமல், சிறார்கள் வாகனம் ஓட்டுவது, போதையில் வாகனம் இயக்குவது, சட்டவிரோதமாக மணல் மற்றும் சரக்குகள் கொண்டு செல்வது உள்ளிட்ட சட்டவிரோத செயல்கள் தொடர்பாகவும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் சாலைப் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, தேனி மாவட்ட காவல்துறை மற்றும் போக்குவரத்து காவல்துறை இணைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



# திருச்சி ஆட்சியர் அலுவலக வாயிலில் தீக்குளிக்க முயன்ற நபரால் பரபரப்பு

## சொத்து விவகாரத்தில் பலமுறை மனு அளித்தும் தீர்வு கிடைக்கவில்லை என குற்றச்சாட்டு

திருச்சி அக்-06

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்க்கும் கூட்டத்தின்போது, சொத்து விவகாரம் தொடர்பாக அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறி ஒருவர் தீக்குளிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம், வெங்கடாசலபுரம் ஜெயஸ்ரீ நகர் பகுதியைச் சேர்ந்த முத்தமிழ்செல்வன், மண்ணெண்ணெய் பாட்டிலை பையில் மறைத்து எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே வந்ததாக கூறப்படுகிறது.

ஆட்சியர் அலுவலக நுழைவுப் பகுதியில் காவல்துறையினர் சோதனையில் ஈடுபட்டிருப்பதை பார்த்த அவர், சாலையில் நின்றபடி தனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குளிக்க முயன்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக அங்கிருந்த காவல்துறையினர் தலையிட்டு, அவர் மீது தண்ணீர் ஊற்றி தடுத்து பாதுகாப்பாக மீட்டனர்.

இதுகுறித்து முத்தமிழ்செல்வன் கூறியதாவது: தனது தந்தை துரைசாமி பெயரில் பூர்வீகச் சொத்து இருந்ததாகவும், தந்தை 1986-ம் ஆண்டு உயிரிழந்த நிலையில் இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் வாரிசுகளாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், அந்தச் சொத்து தனது சகோதரர் மணிவேல் பெயரில் கிரயம் செய்யப்பட்டு பட்டா பெறப்பட்டுள்ளதாகவும், இதுதொடர்பாக பலமுறை அதிகாரிகளிடம் மனு அளித்தும் உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

முசிறி வருவாய் கோட்டாட்சியர், துறையூர் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் தனது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காததால் இந்த முயற்சியில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார்.




# ஜோலார்பேட்டையில் பிரதமர் மோடி பிறந்தநாள் மற்றும் ராமகோபாலன் ஜி நூற்றாண்டு விழா கோலாகலம்

ஜோலார்பேட்டை, அக். 06-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாள் விழா மற்றும் இந்து முன்னணியின் நிறுவனத் தலைவர் ராமகோபாலன் ஜியின் நூற்றாண்டு விழா இணைப்பு நிகழ்வாகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

பாஜக மாவட்ட அயலகப் பிரிவு, ஜோலார்பேட்டை நகரம் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட அமைப்புகள் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்நிகழ்விற்கு, பாஜக அயலகப் பிரிவு மாவட்டத் தலைவர் E.V. ரவீந்திரன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் ஜோதிட ரத்னா R. சுந்தரேசன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அனைத்துப் பிரிவுகளின் மாநில ஒருங்கிணைப்பாளர் K.T. ராகவன் ஜி, அயலகத் தமிழர் பிரிவின் மாநிலத் தலைவர் K.M. சுந்தரம் ஜி I.R.S., மாநிலச் செயலாளர் கொ. வெங்கடேசன், மாவட்டத் தலைவர் M.தண்டாயுதபாணி, மாவட்டத் துணைத் தலைவர் V.அன்பழகன், மாவட்ட பொதுச் செயலாளர் C.கவியரசு, ஜோலார்பேட்டை நகரம் தலைவர் E.V.R.மனோஜ் குமார், உள்ளிட்ட மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

விழாவின் ஒரு பகுதியாக மகளிரின் பரதநாட்டியம், ஆடவர்களின் சிலம்பாட்டம் மற்றும் பிரமிடு விளையாட்டு போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் பார்வையாளர்களைக் கவரும் வகையில் விமரிசையாக நடைபெற்றன.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மதுரை மாவட்டம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் மதுரை மேற்கு வட்டத்திற்கு உட்பட்ட 12 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 20,000/- வீதம் நலிவடைந்தோர் ஊக்கத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா வழங்கினார்.

# தேனி மாவட்டத்தில் 2026-27-ம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

தேனி, அக். 06-

தேனி மாவட்டத்தில் 2026-27-ம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் சம்பா சிறப்பு பருவம் நெல் பயிருக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் தேனி மாவட்டத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டம் ஷேமா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட் காப்பீட்டு நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகிறது. தற்போது தேனி மாவட்டத்தில் நெல் சம்பா சிறப்பு பருவ பயிருக்கு ஆண்டிபட்டி, கண்டமனூர், இராஜதானி, தேவதானப்பட்டி, தென்கரை, தேனி, கொடுவிலார்பட்டி, கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், மார்க்கையன் கோட்டை, போடிநாயக்கனூர், கோடாங்கிப்பட்டி, ராசிங்காபுரம் ஆகிய 14 குறு வட்டங்கள் (பிர்காக்கள்) அறிவிப்பு செய்யப்பட்டுள்ளன.சம்பா சிறப்பு பருவத்தில் காப்பீடு செய்யப்படும் நெற்பயிர்களை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான வருகிற நவம்பர் மாதம் 16-ந் தேதிக்குள் விவசாயிகள் தங்கள்விருப்பத்தின் பேரில் காப்பீடு செய்ய வேண்டும்.




ஒரு ஏக்கருக்கான பயிர் காப்பீட்டுத் தொகை ரூ. 38,828-ல் விவசாயிகள் 1.5 சதவீதம் மட்டும் காப்பீட்டுக் கட்டணமாக நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.589.50 மட்டும் செலுத்தினால் போதுமானது.

எனவே சம்பா நெல் சிறப்பு பருவம் சாகுபடி மேற்கொண்டு விவசாயக்கடன் கூட்டுறவு சங்கத்திலோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ கடன்பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட நெற் பயிருக்கு காப்பீடு செய்ய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்களிலோ தேசிய பயிர் காப்பீட்டு இணையத்தளத்தில் உள்ள விவசாயிகள் கார்னரில் (www.pmfby.gov.in) நேரிடையாகவோ நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் விருப்பத்தின்பேரில் காப்பீடு செய்யலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போது முன்மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பசலி க்கான அடங்கல்,

இ-அடங்கல் சான்றிதழ், வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், பணம் செலுத்தும் போது தாங்கள் சாகுபடி செய்துள்ள வருவாய் கிராமம் மற்றும் புல எண் போன்ற விவரங்கள் சரியாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் சரி பார்த்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

# ஞானேஷ்குமார் ராஜினாமா, எஸ்ஐஆர் ரத்து, வாக்குச்சீட்டில் தேர்தல் என்பதில் சமரசமே கிடையாது: மல்லிகார்ஜுன கார்கே



டெல்லி, அக்.06-

ஞானேஷ்குமார் ராஜினாமா, எஸ்ஐஆர் ரத்து, வாக்குச்சீட்டில் தேர்தல் என்பதில் சமரசமே கிடையாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

காங்கிரஸ் கட்சியின் மூன்று கோரிக்கைகள் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லாதவை. முதலாவதாக, கியானேஷ் குமாரின் பதவி விலகல்; இரண்டாவதாக, SIR-ஐ ரத்து செய்தல்; மூன்றாவதாக, வாக்குச்சீட்டு முறையில் தேர்தலை நடத்துதல்.இந்த மூன்று விவகாரங்களுக்காக நாடு முழுவதும் காங்கிரஸ் தொண்டர்களும் 'இந்தியா' (INDIA) கூட்டணியின் கூட்டாளிகளும் வீதிக்கு வந்து போராடி வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் இவ்விகாரங்களுக்காகப் போராடும் சிவில் சமூகத்தினர் மற்றும் இளைஞர் அமைப்பினருடன் நாங்கள் துணை நிற்கிறோம் என்று அவர் கூறியுள்ளார்.

மறுபுறம், டெல்லியில் பெண் பத்திரிகையாளர்கள் மீது பாஜகவினர் நடத்திய அத்துமீறல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் மிகவும் கண்டிக்கத்தக்கவை.அந்த சர்வாதிகாரி கடும் பீதியில் உள்ளார்; மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் உத்திகளின் அடுத்த கட்டத்திற்குத் தயாராகுங்கள் என்று சமூக வலைதள பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்-1, ஆதீஸ்வரன் நகர் 3வது தெரு மற்றும் பொன்மேனி கார்டன் ஆகிய பகுதிகளை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு, அப்பகுதியில் உள்ள பொது மக்களிடம் குப்பைகளை நான்கு வகைகளாக தரம் பிரித்து வழங்குவது தொடர்பாக எடுத்துரைத்தார்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்-3, எல்லீஸ் நகரில் ஆரப்பாளையம் பகுதியில் இருந்து வரக்கூடிய சிந்தாமணி கால்வாய் மற்றும் விராட்டிபத்திலிருந்து குண்டாறு செல்லும் நீர்வளத்துறைக்கு பாத்தியப்பட்ட கிருதுமால் கால்வாய் இணையும் இடத்தை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப.,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் முதலமைச்சர் காப்பீடு திட்டத்தின் மூலம் 6 பயனாளிகளுக்கு ரூபாய் 7,55,700 மதிப்பீட்டில் செயற்கை அவையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா,இ.ஆ.ப.,வழங்கினார்.

## மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் வாணியம்பாடி

## ந.க. அ1/2170/2026

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பெருமாபட்டு கிராமம், 4/125 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. பாலாமணி (க/பெ. சிங்காரம்) என்பவரின் மகள் சரஸ்வதி என்பவர் கடந்த 09.10.2009 -ம்ஆண்டு அன்று வாணியம்பாடி வட்டம்

ஆலங்காயம் என்ற கிராமத்தில், இறந்துவிட்டார். இவரது இறப்பைக் காலதாமதமாகப் பதிவு செய்வது தொடர்பாக ஆட்சேபனை ஏதும்மிருப்பின், இவ்விளம்பரம் கண்ட 30 தினங்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி அவர்களிடம் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும்..

**மனுதாரர்:**
**திருமதி. பாலாமணி**
**(க/பெ. சிங்காரம்)**
**முகவரி: 4/125,பெருமாபட்டுகிராமம்,**
**திருப்பத்தூர் வட்டம் & மாவட்டம்.**



■ திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைதேர்தல்-2026 முன்னிட்டு தேர்தல் பொதுபார்வையாளர் சின்மய் புண்ட்லிக்ராவ் கோட்மரோ மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகர துணை காவல் ஆணையர் ஆகாஷ் ஜோசி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) கண்ணன் ஆகியோர் உள்ளனர்.








# சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி

சிவகங்கை, அக்.06-

உலக இதய தினத்தை முன்னிட்டு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இதய நோய் தடுப்பு மற்றும் இதய ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

மருத்துவமனை முதல்வர் டாக்டர் ச. கலைவாணி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் A. தமிழ்வாணன், RMO டாக்டர் S. முகமது ரஃபி, ARMO டாக்டர்கள் மற்றும் பல்வேறு துறை மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

இதில் பொதுமக்கள் மற்றும் நோயாளிகளுக்கு இதய நோய்களைத் தடுக்கும் வழிமுறைகள், ஆரோக்கியமான உணவுப் பழக்கம், உடற்பயிற்சியின் அவசியம், புகையிலை மற்றும் மதுப்பழக்கத்தைத் தவிர்ப்பது உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், இதய நோய் தடுப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. மருத்துவமனைக்கு வந்த பொதுமக்கள், உள்நோயாளிகளின் உதவியாளர்கள் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.





# காரைக்குடியில் காந்தியடிகள் பிறந்தநாள் விழா : எல்.ஐ.சி. ஊழியர் சங்கம் சார்பில் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

காரைக்குடி, அக். 06-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளை முன்னிட்டு, எல்.ஐ.சி. ஊழியர் சங்க கிளை சார்பில் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு எல்.ஐ.சி. ஊழியர் சங்க கிளைச் செயலாளர் நெல்லையன் தலைமை வகித்தார். முகமது அன்சாரி உறுதி மொழியை வாசிக்க, நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இதில் வளர்ச்சி அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த ஆனந்த், பென்ஷன் சங்கத்தைச் சேர்ந்த குணசேகரன், கோபாலகிருஷ்ணன், காசிலிங்கம், பெத்தபெருமாள், சுந்தர், சி.பி.எம். தொழிற்சங்க அமைப்பாளர் அழகர்சாமி, ஆட்டோ சங்க பொதுச் செயலாளர் சுப்பிரமணியன், உறுப்பினர்கள் சுரேஷ், கன்னன், ஆறுமுகம் மற்றும் முகவர் சங்க உறுப்பினர் பொம்முராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு காந்தியடிகளுக்கு மரியாதை செலுத்தினர்.



■ நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பேருந்து நிலையத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டனர்.




■ குன்னூர் வனச்சரகம் சார்பாக வன உயிரின வார விழாவை முன்னிட்டு குன்னூர் வனச்சரக அலுவலர் c. வீரமணி, ஏற்பாட்டின்படி வனவர் சரவணகுமார் மற்றும் வனத்துறை பணியாளர்கள் மற்றும் WECT NGO , Western ghats NGO ஆகியோருடன் இணைந்து காட்டேரி முதல் KMS வரை( சுமார் 3 கிமீ) சாலையின் இரு புறமும் உள்ள வனப் பகுதியை ஒட்டிய இடங்களில் கண்ணாடி பாட்டில்கள், பிளாஸ்டிக், மற்றும் குப்பைகளை அகற்றி சேகாரம் செய்யும் பணி நடைபெற்றது.

# தமிழக வெற்றிகழகம் கிழக்கு மாவட்டம் சார்பில் தூதூர்மட்டத்தில் புதிய அலுவலகம் திறப்பு விழா மற்றும் இளைஞர்களின் விளையாட்டு திறமையை ஊக்குவிக்க உற்சாகப் போட்டிகள்






நீலகிரி, குன்னூர், அக். 06-

நீலகிரி மாவட்டம் தூதூர்மட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலின்படி, தமிழக வெற்றிக் கழகத்தின் நீலகிரி கிழக்கு மாவட்டம் சார்பில் இளைஞர்களின் விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் மக்கள் நல நிகழ்ச்சிகள் உற்சாகமாக நடைபெற்றன.

நீலகிரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் D. ரமேஷ் B.Com., TTC மற்றும் மாவட்ட கழக செயலாளர் S. பாமா ரமேஷ் ஆகியோர் தலைமையில், மாவட்ட வாக்குச்சாவடி அணி அமைப்பாளர் P.S.K. கார்த்திக் DME., B.E. ஏற்பாட்டில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் தொடக்கமாக காலை 10 மணிக்கு மகாத்மா காந்தியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து காலை 11 மணிக்கு புதிய கழக அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதையடுத்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடம் மறைந்துள்ள விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் நூற்றுக்கணக்கான குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

குறிப்பாக ஏராளமான மகளிர் அணியினர் நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டது நிகழ்ச்சிக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

மேலும், இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகாமல் ஆரோக்கியமான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் போதை மற்றும் போதைப்பொருள் பயன்பா ட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்கள் விளையாட்டு மற்றும் சமூக நலச் செயல்பாடுகளில் அதிகளவில் ஈடுபட வேண்டியதன் அவசியமும் எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து மதியம் 1 மணிக்கு அன்னதானம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

மக்கள் நலனில் அக்கறை கொண்டு, குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களை விளையாட்டின் மூலம் ஊக்குவிப்பதுடன் போதைப்பொ ருள் ஒழிப்பு விழிப்பு ணர்வையும் ஏற்படுத்தும் வகையில் P.S.K. கார்த்திக் ஏற்பாட்டில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் அனைத்து தரப்பினரின் பாராட்டையும் பெற்றன.

நிகழ்ச்சியில் நகரம், ஒன்றியம், ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட மற்றும் நகர சார்பு அணி அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர், தொண்டர்கள், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கொடைக்கானல் அருகே மூலையார் பகுதியில்

# காப்பி எஸ்டேட் தோட்ட வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கஞ்சா, நாட்டு குண்டு பறிமுதல்



திண்டுக்கல், அக்.06-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகே அமைந்துள்ள மூலையார் என்னும் பகுதியில் சுபாஷ் என்பவரின் காபி எஸ்டேட்டில் உள்ள வீட்டில் கஞ்சா மற்றும் துப்பாக்கி தோட்டா, மான் வேட்டையாடி அதன் கொம்புகள் வைத்திருப்பதாக தாண்டிகுடி காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து தாண்டிக்குடி காவல் ஆய்வாளர் மற்றும் அவரது குழுவினர் சுபாஷின் தோட்டத்தின் வீட்டில் சோதனை மேற்கொண்டது அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 30 கிராம் கஞ்சா மற்றும் 3 நாட்டு குண்டுகள் கிடைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சுபாஷ் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் மான் வேட்டையாடியதாக கூறப்படும் நிலையில் பண்ணைக்காடு உட்கோட்ட வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்ததை தொடர்ந்து வனத்துறையினரும் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இச்சம்பவம் குறித்து முக்கிய புள்ளிகள் யாரேனும் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்ற கோணத்திலும் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீ ஆதி வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் புரட்டாசி முதலாம் ஆண்டு மூன்றாவது வார சனிக்கிழமை திருவிழா



மாதவரம், அக். 06-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி கோமதியம்மன் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆதி வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் புரட்டாசி முதலாம் ஆண்டு மூன்றாவது வார சனிக்கிழமை திருவிழா ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவர் சுவாமிக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொ டர்ந்து பஜனையுடன் பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது

# செய்தியாளர்களை தரம் பிரித்து அலட்சியப்படுத்தும் திருப்பத்தூர் PRO ராஜ பிரகாஷ் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை!




திருப்பத்தூர், அக். 06-

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக தரைத்தளத்தில் இயங்கி வரும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் (PRO) அலுவலராகப் பணிபுரிந்து வரும் ராஜ பிரகாஷ், செய்தியாளர்களை தரம் பிரித்து அலட்சியமாகச் செயல்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன

**வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் பாகுபாடு:**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் கண்காணிப்பில் செய்தியாளர்களுக்காக ஒரே ஒரு அதிகாரப்பூர்வ வாட்ஸ்அப் (WhatsApp) குழு மட்டுமே இயங்கி வருகிறது.

ஆனால், திருப்பத்தூர் மாவட்டத்தில் மட்டும் செய்தியாளர்களை தரம் பிரித்து நான்கு தனித்தனி வாட்ஸ்அப் குழுக்களாகப் பிரித்து வைத்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, "என் இஷ்டப்படிதான் செயல்படுவேன், எனக்கு யாரும் அறிவுறுத்தத் தேவையில்லை" என்று அலட்சியமாகப் பதிலளிப்பதாகக் கூறப்படுகிறது.

**அதிகார தோரணை மற்றும் ஒருமை பேச்சு:**

செய்தியாளர்கள் மற்றும் அலுவலகப் பார்வையாளர்களை மதிக்காமல், கால் மேல் கால் போட்டுக்கொண்டு கையைக் கட்டியபடி "உங்களால் முடிந்ததைச் செய்து கொள்ளுங்கள், என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது" எனத் திமிராகப் பேசுவதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

மேலும், அவருடன் பணிபுரியும் சக அரசு அதிகாரிகள், கீழ்நிலை ஊழியர்களை "யோவ், வாயா, போயா, போடா, வாடா" என அனாவசியமான வார்த்தைகளில் திட்டுவதும், ஒருமையில் பேசுவதும் இவரது வழக்கமாக உள்ளதாகத் தெரிகிறது.

**லஞ்சக் குற்றச்சாட்டுகள் மற்றும் நிதியிழப்பு:**

இவர் மீது பல்வேறு பண முறைகேடுப் புகார்களும் எழுந்துள்ளன:

**திருவிழாக்கள்:**

ஆடி 18 விழா கொடையாஞ்சி ஆற்றுப் பகுதியில் ரங்கராட்டினம் இயக்கியவர்களிடம் ₹10,000 பெற்றதாகவும், மண்டலவாடி கோயிலில் அமைக்கப்பட்ட ரங்கராட்டின உரிமையாளர்களிடம் தகராறு செய்து ₹20,000 கேட்டு, இறுதியாக ₹10,000 பெற்றதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

**அரசு நிகழ்ச்சிகள் & மாதாந்திர வசூல்:**

மாவட்ட ஆட்சியர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளின் போது அங்கிருக்கும் அலுவலர்கள், BDO, பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் பணம் கேட்டுத் தொந்தரவு செய்வதாகவும், செய்தியாளர்களுக்கு வழங்க வேண்டும் எனக் கூறி ₹10,000 முதல் ₹20,000 வரை வசூலிப்பதாகவும் கூறப்படுகிறது. மேலும், திங்கள் முதல் வியாழக்கிழமை வரை ஒப்பந்ததாரர்களிடம் சந்தாவாக ₹1,200 முதல் ₹1,500 வரை வாரம் தவறாமல் வசூலிப்பதாகக் கூறப்படுகிறது.

**கண்காட்சி & விழா நிதி:**

ஆம்பூரில் 38 நாட்கள் நடைபெற உள்ள கண்காட்சி உரிமையாளரிடம் ₹30,000 லஞ்சம் கேட்டதாகவும், ஏலகிரி மலையில் நடைபெற்ற கோடை விழாவிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ₹40,000 முறைகேடு செய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**பண்டிகை கால வசூல்:**

கடந்த வருடம் தீபாவளி காலத்தில் RTO, HR&CE மற்றும் நில அளவைத் துறை அதிகாரிகளிடம் பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் எனக் கூறி ₹50,000 முதல் ₹1,00,000 வரை பெற்றுத் தன் சுயநலத்திற்குப் பயன்படுத்தியதாகவும் குற்றச்சாட்டு உள்ளது.

**அரசுச் சொத்து பராமரிப்பு மற்றும் சலுகைகள் மறுப்பு:**

தமிழ்நாடு அரசால் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு (PRO Office) வழங்கப்படும் கணினிகள் மற்றும் உபகரணங்களைச் செய்தியாளர்கள் செய்தி அனுப்பப் பயன்படுத்த முடியாதபடி தன்னிச்சையாகச் செயல்பட்டு வருகிறார். மேலும், அரசு வழங்கும் இலவசப் பேருந்து பயண அட்டையைக் (Bus Pass) கூட தகுதியான அனைவருக்கும் வழங்காமல், ஒரு சில செய்தியாளர்களை மட்டும் திட்டமிட்டுத் தவிர்த்துப் பாகுபாடு காட்டி வருகிறார்.

ஒரு சிலரின் தூண்டுதலின் பேரில் செய்தியாளர்களைப் பிரித்தாளும் நோக்கில் செயல்பட்டு வரும் பி.ஆர்.ஓ ராஜ பிரகாஷ் மீது திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகமும், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் திருப்பத்தூர் மாவட்ட செய்தியாளர்கள் வலுவான கோரிக்கை விடுத்துள்ளனர்.

# “துவரம் பருப்பு கொள்முதல் விலையில் உண்மையை மறைப்பதா?” – உதயநிதி சாடல்

சென்னை, அக்.06–

“2024 நவம்பரில் ரூ.112.69 ஆக இருந்த துவரம் பருப்பின் கொள்முதல் விலையை, படிப்படியாக கடந்த பிப்ரவரி மாதம் ரூ.77.99 ஆகக் குறைத்தது திமுக அரசு. இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, இந்த ஆட்சியில் தான் குறைந்த விலைக்கு துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டது என்று திமுக மீது அவதூறு பரப்புவதை ஏற்க முடியாது.” என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘திமுக ஆட்சியில் கிலோ ரூ.109–க்கு கொள்முதல் செய்யப்பட்ட துவரம் பருப்பை இந்த அரசு, ரூ.77.89–க்கு வாங்கியுள்ளதாகவும், இதனால் இந்த ஆட்சியில் கொள்முதல் விலை ரூ.31 வரை குறைந்து, அரசுக்கு 750 கோடி மிச்சமாகும் என்றும், அரைகுறையாகவும் – உண்மைகளை மறைத்தும் வெளியிடப்பட்டுள்ள ஓர் செய்தியை ஆளுங்கட்சியின் டூல்கிட்ஸ் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய விலைக்குறைப்புக்குக் காரணம், தவெக அரசு அல்ல, முந்தைய திமுக அரசு தான் என்பதே நிதர்சனமான உண்மை. 2024 நவம்பரில் ரூ.112.69 ஆக இருந்த துவரம் பருப்பின் கொள்முதல் விலையை, படிப்படியாக கடந்த பிப்ரவரி மாதம் ரூ.77.99 ஆகக் குறைத்தது திமுக அரசு.

இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, இந்த ஆட்சியில் தான் குறைந்த விலைக்கு துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டது என்று திமுகவின் மீது அவதூறு பரப்புவதை ஏற்க முடியாது.

அதுமட்டுமல்ல, ரேஷன் கடைகளில் வழங்கப்படும் பாமாயில், திமுக ஆட்சியில் சென்றாண்டு செப்டம்பரில் லிட்டர் ரூ.124.90 க்கும், டிசம்பரில் ரூ.121.95 க்கும், கடந்த மார்ச் மாதத்தில் ரூ.136.95–க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

ஆனால், இந்த ஆட்சியில் கடந்த ஜூன் மாதத்தில் ரூ.154.99 க்கும், தற்போது ரூ.148–க்கும் அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்துள்ளனர். திமுக ஆட்சியில் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்ட பாமாயிலை, கடந்த 3 மாதங்களில், லிட்டருக்கு ரூ.11 அதிகம் கொடுத்து இந்த ஆட்சியில் வாங்குகிறார்கள் என்றால், சுமார் ரூ.600 கோடிக்கு மேல் ஊழல் நடந்து இருக்கிறது என்று தானே அர்த்தம். அநாகரீகமாக நடந்துகொள்பவர்கள் (Abusive Warriors) தான் உண்மையிடம் இருந்து தூரத்தில் நிற்கிறார்கள் என்றால், இந்த ஆட்சியில் சில ஊடகங்களும் ரசிகர் மாதிரி சோஃபா மாடலில் சிக்கி நிற்பது ஏன்? அவதூறு பரப்புவதை நிறுத்திவிட்டு, விலைவாசி உயர்வால் அன்றாடம் அல்லல்படும் மக்களின் துயர் துடைக்க இந்த ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்,” எனத் தெரிவித்துள்ளார்.

# காங்கிரஸ் எம்.பி.யிடம் மெழுகுவர்த்தியை பிடுங்கி வீசிய தவெக எம்எல்ஏ: திருச்சியில் அரசு விழாவில் பரபரப்பு

திருச்சி, அக்.06–

திருச்சியில் நடந்த சமுதாய வளைகாப்பு விழாவில் குத்துவிளக்கு ஏற்றும்போது புரோட்டோக்கால் பின்பற்றாமல் செயல்படுவதாகக் கூறி காங்கிரஸ் எம்பி கிறஸ்டோபர் திலக்கிடமிருந்து மெழுகுவர்த்தியை பிடுங்கி வீசிய திருவெறும்பூர் தவெக எம்எல்ஏவால் விழா அரங்கில் பரபரப்பு ஏற்பட்டது.



திருச்சி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில், 240 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா திருச்சி கலையரங்கத்தில் இன்று நடைபெற்றது.

தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ்.ரமேஷ், குத்து விளக்கு ஏற்றி வைத்தார். ஆட்சியர் பிரத்திக் தாயள், தவெக எம்எல்ஏக்கள் மணப்பாறை ஆர்.கதிரவன், முசிறி விக்னேஷ் ஆகியோரைத் தொடர்ந்து தன்னிடம் மெழுகுவர்த்தியை தராமல் காங்கிரஸ் எம்பி கிறிஸ்டோபர் திலக்கிடம் கொடுத்தனர்.

அருகில் நின்றிருந்த திருவெறும்பூர் தவெக எம்எல்ஏ நவல்பட்டு விஜி, கிறிஸ்டோபர் திலக்கிடமிருந்து மெழுகுவர்த்தியை வாங்கினார். இதை சற்றும் எதிர்பார்க்காத எம்பி கிறிஸ்டோபர் திலக் அதிர்ச்சியடைந்தார்.

இதை கவனித்த அமைச்சர் ரமேஷ், ‘எம்பி குத்துவிளக்கு ஏற்றிய பிறகு, நீங்கள் ஏற்றுங்கள்’ என்றதும், ஆத்திரமடைந்த நவல்பட்டு விஜி, ‘என்ன புரோட்டோகால் ஃபாளோ பண்றீங்க. இதுக்கு எதுக்கு என்னை அழைக்கிறீர்கள். நான் கிளம்புறேன்’ என ஆவேசமாகக் கூறி மெழுகுவர்த்தியை தூக்கி தரையில் வீசினார்.

இதனால் மேடையில் இருந்த அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். எம்பி கிறஸ்டோபர் திலக் தர்மசங்கடத்தில் செய்வதறியாமல் நின்றார். கீழே விழுந்த மெழுகுவர்த்தியை அமைச்சர் ரமேஷ் எடுத்துக் கொடுத்து குத்துவிளக்கு ஏற்றும்படி எம்எல்ஏ நவல்பட்டு விஜியிடம் கூறினார். அமைச்சரின் சமாதானத்தை தொடர்ந்து அவர் குத்துவிளக்கு ஏற்றினார்.

தொடர்ந்து சமுதாய வளைகாப்பு விழாவில் பங்கேற்ற கர்ப்பிணிகள் அமைச்சர் உள்ளிட்ட எம்எல்ஏகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட போது, புகைப்படம் எடுக்க நின்றபோது, புரோட்டோக்கால்படி தன்னை மதிப்பதில்லை எனக்கூறியும், சீனியரான தனக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை எனக்கூறியும் எம்எல்ஏ கதிரவனுடன் நவல்பட்டு விஜி வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

அப்போது கதிரவன், ‘அண்ணே கொஞ்சம் அமைதியா இருங்க...’ என கோபமாக கூறியபோது, இருவருக்கிடையே வாக்குவாதம் முற்றியது. இதைப்பார்த்த அமைச்சர் ரமேஷ் தலையிட்டு இருவரையும் சமாதானம் செய்து வைத்தார். இதனால் அரங்கத்தில் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் திருச்சி மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ரெக்ஸ் உள்ளிட்டோர் நவல்பட்டு விஜியை சமாதானம் செய்தனர். அதைத் தொடர்ந்து அமைச்சர் ரமேஷ் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, ‘திமுக, அதிமுக உள்ளிட்ட பிறக்கட்சியிலிருந்து விலகி தவெகவுக்கு வந்தவர்களுக்கு தவெகவினர் முக்கியத்துவம் அளிப்பதில்லை என்ற குறைபாடு உள்ளதே’ என செய்தியாளர்கள் கேட்ட போது, அமைச்சர் ரமேஷ் ‘அதெல்லாம் ஒன்றுமில்லை. அனைவருக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. புரோட்டோக்கால் படி மெழுகுவர்த்தி ஏற்ற வேண்டும் என்று தான் எம்எல்ஏ கூறினார். நாங்கள் ஒற்றுமையாக அண்ணன்–தம்பியாக இருக்கிறோம்.

நீங்கள் தேவையில்லாத குழப்பத்தை உருவாக்க வேண்டாம். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுகிறோம். ஒரு பிரச்சினையும் கிடையாது’ என்றார். எம்எல்ஏ நவல்பட்டு விஜியும், ‘புரோட்டோகாலை பின்பற்ற வேண்டும் என்று தான் கூறினேன்’ என்றார்.

அப்போது, ‘திமுக, அதிமுக உள்ளிட்ட பிறக்கட்சியிலிருந்து விலகி தவெகவுக்கு வந்தவர்களுக்கு தவெகவினர் முக்கியத்துவம் அளிப்ப தில்லை என்ற குறைபாடு உள்ளதே’ என செய்தியாளர்கள் கேட்டபோது, அமைச்சர் ரமேஷ் ‘அதெல்லாம் ஒன்றுமில்லை. அனைவருக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. புரோட்டோக்கால் படி மெழுகுவர்த்தி ஏற்ற வேண்டும் என்று தான் எம்எல்ஏ கூறினார். நாங்கள் ஒற்றுமையாக அண்ணன்–தம்பியாக இருக்கிறோம்.

நீங்கள் தேவையில்லாத குழப்பத்தை உருவாக்க வேண்டாம். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுகிறோம். ஒரு பிரச்சினையும் கிடையாது’ என்றார். எம்எல்ஏ நவல்பட்டு விஜியும், ‘புரோட்டோகாலை பின்பற்ற வேண்டும் என்று தான் கூறினேன்’ என்றார்.



# நாகர்கோவிலை சேர்ந்த இன்ஸ்டா பிரபலம் மதுமிதா மீது திருட்டு வழக்கு பதிவு!

நாகர்கோவில், அக்.06–

நெல்லை மாவட்டம் கேடிசி நகர் பகுதியை சேர்ந்த பேச்சிமுத்து என்பவர் நாகர்கோவில் ராஜாக்கமங்கலம் காவல் நிலையத்தில் தற்பொழுது புகார் மனு ஒன்றை அளித்துள்ளார்.

அதில் தன் முதுகுவலி சிகிச்சைக்காக நெல்லையில் அடிக்கடி ஒரு பிசியோதரப்பி மையத்திற்கு சென்று வந்ததாகவும், அப்போது நாகர்கோவில் சம்பத்துக்குளம் பகுதியை சேர்ந்த மதுமிதா என்பவர் அறிமுகமானதாகவும் கூறியுள்ளார், மேலும் மதுமிதா அடிக்கடி தன்னுடன் செல்போனில் பேசி வந்துள்ளதாகவும் கடந்த 2022ஆம் ஆண்டு நெல்லை நீதிமன்ற பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தத்திற்கு தன்னை வருமாறு அழைத்ததாகவும், அந்த நேரம் மதுமிதா தனது வாகனத்தில் அமர்ந்ததாகவும் பின்னர் அவர் ஓரிடத்தில் டிராப் செய்ய சொன்னதாகவும் புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

அவர் இறக்கி விட சொன்ன இடத்தில் இறக்கிவிட்டு பின்னர் அங்கிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், வீட்டிற்கு சென்று பார்த்த பொழுது தனது கழுத்தில் கிடந்த 5 சவரன் தங்க நகை காணாமல் போனதை பார்த்து அவர் அதிர்ச்சி அடைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இது குறித்து மதுமிதாவிடம் கேட்டபோது அதற்கு அவர் எந்த பதிலும் கூறாமல் விரட்டியதாக புகாரில் தெரிவித்துள்ளார். தற்பொழுது மதுமிதா ஒரு யூடியூபராக இருந்து வருகிறார், அவர் சில தினங்களுக்கு முன்பு தனது வீட்டில் நகை, பணம் இருப்பதை வீடியோ வாக வெளியிட்ட நிலையில் 118 சவரன் நகை அவர் வீட்டில் கொள்ளை போனது.

இதில் ஸ்ரீவைகுண்டத்தை சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளார், இதில் 98சவரன் நகை மீட்கப்பட்டு இந்த விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மதுமிதா வீட்டில் நடந்த இந்த கொள்ளை சம்பவத்தை தொடர்ந்து அவர் மீது ஒரு நகை திருட்டு வழக்கு ராஜாக்கமங்கலம் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டு புகார் அளிக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திள்ளது. மேலும் இவருக்கு இந்த வருமானம் பணம், நகைகள் குறித்து தொடர்ந்து அவர் மீது விசாரணை நடத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஞானேஷ்குமார் ராஜினாமா, எஸ்ஐஆர் ரத்து, வாக்குச்சீட்டில் தேர்தல் என்பதில் சமரசமே கிடையாது: மல்லிகார்ஜுன கார்கே



டெல்லி, அக்.06–

ஞானேஷ்குமார் ராஜினாமா, எஸ்ஐஆர் ரத்து, வாக்குச்சீட்டில் தேர்தல் என்பதில் சமரசமே கிடையாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

காங்கிரஸ் கட்சியின் மூன்று கோரிக்கைகள் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லாதவை. முதலாவதாக, கியானேஷ் குமாரின் பதவி விலகல்; இரண்டாவதாக, SIR–ஐ ரத்து செய்தல்; மூன்றாவதாக, வாக்குச்சீட்டு முறையில் தேர்தலை நடத்துதல்.இந்த மூன்று விவகாரங்களுக்காக நாடு முழுவதும் காங்கிரஸ் தொண்டர்களும் ‘இந்தியா’ (INDIA) கூட்டணியின் கூட்டாளிகளும் வீதிக்கு வந்து போராடி வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் இவ்விகாரங்களுக்காகப் போராடும் சிவில் சமூகத்தினர் மற்றும் இளைஞர் அமைப்பினருடன் நாங்கள் துணை நிற்கிறோம் என்று அவர் கூறியுள்ளார்.

மறுபுறம், டெல்லியில் பெண் பத்திரிகையாளர்கள் மீது பாஜகவினர் நடத்திய அத்துமீறல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் மிகவும் கண்டிக்கத்தக்கவை.அந்த சர்வாதிகாரி கடும் பீதியில் உள்ளார்; மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் உத்திகளின் அடுத்த கட்டத்திற்குத் தயாராகுங்கள் என்று சமூக வலைதள பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

# பாக். பெண் உளவாளியிடம் ராணுவ ரகசியங்களை வெளியிட்ட இந்திய கடற்படை மாலுமி கோவையில் கைது

கோவை, அக்.06–

பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் உளவுத் துறை அதிகாரிக்கு, ரகசியத் தகவலை கசியவிட்டதாக இந்திய கடற்படை மாலுமி கோவையில் கைது செய்யப்பட்டார்.



மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பிரதீப் முகர்ஜி (31), இந்தியக் கடற்படையில் விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்ட கிழக்கு கடற்படையில் மாலுமியாகப் பணியாற்றி வருகிறார். கோவை ரெட்ஃபீல்ட் பகுதியில் உள்ள இந்திய கடற்படை பயிற்சி மையமான ஐஎன்எஸ் அக்ரானியில் நடைபெறும் மேலாண்மை மேம்பாட்டுப் பயிற்சி முகாமில் கடந்த ஒரு வாரமாக தங்கி பிரதீப் முகர்ஜி பயிற்சி பெற்றார்.

இந்நிலையில், ஆந்திர காவல் துறையில் பயங்கரவாதக் குழுக்கள், எல்லை தாண்டிய உளவு மற்றும் உயர் பாதுகாப்பு அச்சுறுத்தல் களை விசாரிக்கும் சிறப்பு உளவுப் பிரிவு போலீஸார் இருதினங்களுக்கு முன் கோவைக்கு வந்து இவரை கைது செய்தனர்.

இது தொடர்பாக போலீஸார் கூறியதாவது: பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் உளவுத் துறை அதிகாரிக்கு, இந்திய கடற்படையின் ரகசிய பாதுகாப்புத் தகவல்களை பிரதீப் முகர்ஜி கசிய விட்டிருப்பது சிறப்பு உளவு பிரிவினருக்கு முதல் கட்டமாக தெரியவந்துள்ளது.

மேலும், சமூக ஊடகங்களில் பாகிஸ்தானிய பெண் உளவாளியிடம், விசாகப்பட்டினம் கடற்படைத் தளத்துடன் தொடர்புடைய தகவல்களை பகிர்ந்ததும் உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து, ஆந்திர சிறப்பு பிரிவு போலீஸார், பிரதீப் முகர்ஜிகுறித்த தகவல்களை தெரிவித்து கைது செய்ய இந்திய கடற்படை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றனர்.

தொடர்ந்து, ஆந்திராவில் இருந்து கோவைக்கு வந்த சிறப்புக் குழு, பிரதீப் முகர்ஜியை கைது செய்தனர். அவரை கோவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, விஜயவாடாவுக்கு அழைத்துச் சென்றனர். இவ்வாறு போலீஸார் தெரிவித்தனர்.

# flydubai சம்பவத்தை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு அவசர உத்தரவு!

ஜெருசலம், அக்.06–

துபாயிலிருந்து இஸ்ரேலின் டெல் அவீவ் நகருக்கு சென்ற பிளை துபாய் விமானத்தில் ஓமன் நாட்டை சேர்ந்த துணை பைலட் இந்திய தலைமை பைலட்டை தாக்கி விமானத்தை விபத்துக்குள்ளாக முயற்சி செய்துள்ளதை தொடர்ந்து. இஸ்ரேலுக்கு வரும் அனைத்து சர்வேதேச விமானங்களின் பாதுகாப்பு குறித்தும் விரிவான மறு ஆய்வு நடத்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.இந்திய செய்திகள்



தேசிய பாதுகாப்பு கவுன்சில் தலைவர் சம்முவேல் பெண் எஸ்ராவை நியமித்து வெளிநாட்டு பொது போக்குவரத்துக்கு விமானங்களின் அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் ஆய்வு செய்ய அவர் ஆணையிட்டுள்ளார், இஸ்ரேலுடன் எந்தவித தூதரக உறவும் இல்லாத ஓமன் நாட்டை சேர்ந்த ஒரு பைலட் டெல் அவீவ் செல்லும் விமானத்தை இயக்க எப்படி அனுமதிக்கப்பட்டார், என்ற கேள்வி இஸ்ரேலிய ஊடகங்கள் மற்றும் அரசியல் வட்டாரங்களில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பாதுகாப்பு வீழ்ச்சிக்கு தான் பொறுப்பில்லை என்றும் வெளிநாட்டு விமானங்களின் பாதுகாப்பு மசாத் மற்றும் சென்பெட் ஆகிய உளவு அமைப்பின் கட்டுப்பாட்டில் தான் வருகிறது என்றும் போக்குவரத்து துறை அமைச்சர் மெரி ரேகப் தெரிவித்துள்ளார். இருப்பினும் போக்குவரத்துக்கு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சிவில் விமான போக்குவரத்து ஆணையமே இதற்கு நேரடி பொறுப்பு என்றும் போக்குவரத்து அமைச்சர் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும், என்று எதிர்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையே எதிர்கட்சி தலைவர் யாயீர் லாபிட் நெதன்யாகு அறிவித்துள்ளது, இந்த பாதுகாப்பு மாற ஆய்வு ஒரு போலி விசாரணை என்றும் மிகப்பெரிய வரலாற்று பேரழிவிலிருந்து இஸ்ரேல் தப்பியுள்ள நிலையில் அரசு பொறுப்பற்ற முறையில் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். வரும் அக்டோபர் 27ஆம் தேதி இஸ்ரேலில் தேர்தல் நடைபெற இருக்கு நிலையில் இந்த விமான பாதுகாப்பு வீழ்ச்சி நிதன்யாகு அரசுக்கு பெரிய அரசியல் நெருக்கடியாக உருவாகியுள்ளது.

# 3 தொழிலாளர்களின் குடும்பத்துக்கு இழப்பீடு கோரி அரியலூர் ஆட்சியர் அலுவலகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டோர் கைது

அரியலூர், அக்.06–

செப்டிக் டேங்க் சென்ட்ரிங் பலகை அகற்றச் சென்று உயிரிழந்த 3 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி ஆட்சியர் அலுவலகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், இறந்தவர்களின் உறவினர்களை போலீஸார் கைது செய்தனர்.





செந்துறை வட்டாட்சியர் அலுவலகம் அருகே, சுப்பிரமணியன் என்பவர் புதிதாக கட்டிவரும் வீட்டில் செப்டிக் டேங்க் அமைக்கப்பட்டு வருகிறது. அந்த செப்டிக் டேங்க் கட்டுமான சென்ட்ரிங் பலகை அகற்றும் பணியில் அக்.2–ம் தேதி ஈடுபட்ட தொழிலாளர்களான திருவாரூரை சேர்ந்த பாஸ்கரன், தினகரன் மற்றும் அரியலூரை சேர்ந்த ராமச்சந்திரன் ஆகிய மூவரும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்கமடைந்த நிலையில், தீயணைப்புத் துறையினர் மீட்டு 108 வாகன மூலம் செந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு மயக்கமடைந்த தொழிலாளர்களை பரிசோதித்த மருத்துவர்கள் மூவரும் ஏற்கெனவே உயிரிழந்ததாக கூறியுள்ளனர். மேலும், உயிரிழந்த தொழிலாளர்களின் உடல் பிரேத பரிசோதனைக்காக, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

தொடர்ந்து இழப்பீடு, அரசு வேலை, குழந்தைகளின் படிப்புச் செலவை அரசு ஏற்க கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வலியுறுத்தினர்.

அப்போது அரசு தரப்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து 3 தொழிலாளர்கள் உடல்களும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

இந்நிலையில் பிரேத பரிசோதனை முடிந்தும் உடலை வாங்க மறுத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் தொழிலாளர்களின் குடும்பத்தினர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்துக்கு மனிதக் கழிவுகளை மனிதனே அகற்ற தடை என்ற சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, தலா ரூ.30 லட்சம் இழப்பீடு மற்றும் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை, அவர்களது குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் படிப்பு செலவை அரசு ஏற்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் மிருணாளினி, எஸ்பி செல்வகுமார் தலைமையில் நேற்று இரவு 10 மணி வரை பேச்சுவார்த்தை நீடித்தது. இதில் உரிய முடிவு எட்டப்படவில்லை.

இதையடுத்து இன்று காலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் இறந்தவர்களின் உறவினர்கள், ஆட்சியர் அலுவலகத்தின் உள்ளே நுழைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், மேற்கண்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் எனக் கோரி தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இதையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த அரியலூர் போலீஸார், போராட்டத்தில் ஈடுபட்ட நபர்களை குண்டுகட்டாக தூக்கி கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161